**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-060420224818

Volume: 6

Issue: 4

Month: April

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 15.01.2022

Accepted: 03.03.2022

Published: 01.04.2022

Citation:
Murugesapandian, N. "Transgenders in Ancient Tamil Literature." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 4, 2022, pp. 1–13.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i4.4818

*Corresponding Author:
murugesapandian2011@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Transgenders in Ancient Tamil Literature

**N. Murugesapandian**

*http://orcid.org/0000-0002-1831-7730*

**Abstract -** There is no transgender voice or pro-transgender voice in the ancient Tamil literature.Transgender explanations need to be compiled from what is reported as information in grammaticalcommentary and literary works.Transgender people have been living in Tamil Nadu since ancient times can be found in Sangam literary works. Records about transgenders have appeared inTolkappiyam and Nigandus. Tamil epics narrates that it is possible to know the status of transgender people living in harmony with palace life.Devotional literary works refer to gender's past status as Lord being male, female, and transgender.In Tamil Nadu, transgender people are completely ignored as the emphasis of male chauvinism. In general values about transgender have been recorded in the ancient literary works.

**Key Words:** Sangam Literature, Transgender, History of Transgender, Silappathikaram, Nikandu, Sociological Studies. Nilakesi, Thirukkural, Thevaram, Civaka Chintamani, Tolkappiyam, Nannool.

**References**

1. Munish. W. 2010. Multiple identities of Aravanis. Kollaveerampatti, Jayam Publishing.

# பழந்தமிழ் இலக்கியத்தில் திருநங்கையர்

ந.முருகேசபாண்டியன்

***ஆய்வுச் சுருக்கம்***

*பழந்தமிழ் இலக்கியப் பரப்பில் திருநங்கைகளின் குரல் அல்லது திருநங்கைகளுக்கு ஆதரவான குரல் என்றோ எதுவுமில்லை. இலக்கண விளக்கத்திலும் இலக்கிய விவரிப்பிலும் தகவல்களாகப் பதிவாகியுள்ளவற்றிலிருந்து திருநங்கை பற்றிய விளக்கங்களைத் தொகுக்க வேண்டியுள்ளது. பண்டைக் காலத்திலிருந்து தமிழகத்தில் திருநங்கைகள் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர் என்பதற்கான சான்றுகளைச் சங்க இலக்கியப் படைப்புகளிலிருந்து அறிய முடிகிறது. தொல்காப்பியம் உள்ளிட்ட இலக்கண நூல்களிலும், நிகண்டுகளிலும் திருநங்கை பற்றிய பதிவுகள் இடம் பெற்றுள்ளன. காப்பியங்கள் மூலம் திருநங்கைகள் அரண்மனை வாழ்க்கையுடன் இயைந்து வாழ்ந்த நிலையை அறிய முடிகின்றது. பக்தி இலக்கியப் படைப்புகள் இறைவன் ஆணாய், பெண்ணாய், அலியாய் இருக்கிறான் என்று பால் கடந்த நிலையைக் குறிப்பிட்டுள்ளன. தமிழகத்தில் ஆண்Xபெண் என்ற எதிரிணைக்கு முக்கியத்துவம் தரும் நிலையில் திருநங்கை முற்றிலும் புறக்கணிக்கப்படும் சூழல் நிலவுகிறது. பொதுநிலையில் திருநங்கை பற்றிய மதிப்பீடுகள் கீழான நிலையிலேயே பழந்தமிழ் இலக்கியப் படைப்புகளில் பதிவாகியுள்ளன.*

***முக்கியச் சொற்கள்:*** *சங்க இலக்கியம், திருநங்கை, திருநங்கை வரலாறு, சிலப்பதிகாரம், நிகண்டு, சமூகவியல் ஆய்வு. நீலகேசி, திருக்குறள், தேவாரம், சீவக சிந்தாமணி, தொல்காப்பியம், நன்னூல்.*

இயற்கையின் விநோதங்களும் சூட்சுமங்களும் அளவற்றவை. பேரண்டத்துடன் ஒப்பிடும் போது மனித இருப்புப் புள்ளியாகச் சுருங்கிவிடும். மனிதகுல வரலாறு என்பது இயற்கையை விளங்கிக்கொள்ள முயலும் முயற்சிதான். எல்லாவற்றையும் பாகுபடுத்தி, துல்லியமாக அறிந்துகொள்ள விழையும் மனித மனம் புனையும் புனைவுகள் பெருகிக் கொண்டே இருக்கின்றன. பொதுப்புத்தி சார்ந்த நிலையில் உருவாக்கப்படும் கற்பிதங்களுக்கு அப்பால், வேறு ஒன்று ஸ்தூலமாக இருப்பதுதான் உண்மை. மனிதனின் தொடக்ககால அறிதலே தனது உடலைக் கண்டறிய முயன்றதிலிருந்து தொடங்குகிறது. உடல் உறுப்புகள் பற்றிய பிரக்ஞை காரணமாகவே ஆண், பெண் எனப் பால் பாகுபாடு தோன்றியது. பெண் என்ற சொல், ‘பிளவு’ என்ற சொல்லிலிருந்து உருவாகியிருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது. ஐந்து வயதான பெண் குழந்தைக்கு ஆண் குழந்தையின் சிறிய ஆண்குறி, வால்போலத் தோன்ற வாய்ப்புண்டு. எனினும் சமூக வளர்ப்பு, குடும்பம் காரணமாகக் குழந்தைகள் ஆண், பெண் என்ற பேதத்துடன் எதிரிணையாக வளர்க்கப்படுகின்றன. ஆண் மேலாதிக்கச் சமூகத்தில் வாழ நேரிடும் குழந்தைகளுக்கு, ஆண் எனில் மேன்மை, பெண் எனில் தாழ்வு என நடைமுறை வாழ்க்கை கற்பிக்கின்றது. ஆணுக்கான செயல், வேலை, தோற்றம் முற்றிலும் பெண்ணிடமிருந்து மாறுபாடானது என்ற புரிதலுடன் வளரும் குழந்தைகளின் மனதில் ‘பால் பாகுபாடு’ வலுவடைகிறது. இத்தகைய சூழலில் ஆண் உடலில் பெண் அல்லது பெண்ணுடலில் ஆண் என்ற நிலையை உள்வாங்கிக் கொள்வதில்

பிரச்சினை ஏற்படுகின்றது. ஆண் X பெண் என்ற எதிரிணையைச் சிதைத்து இரண்டும் கலந்த உடலினை எதிர்கொள்வதில் மரபு வழிப்பட்ட சமூகம் குழம்புகிறது.

பெண்ணுக்குள் ஆண், ஆணுக்குள் பெண் என்ற கருத்தியல் சாதாரணமானது. பொது வாக எல்லாப் பெண்களிடமும் ஏதோ ஓர் அளவில் ஆண் தன்மையும், எல்லா ஆண்களிடமும் ஏதோ ஓர் அளவில் பெண் தன்மையும் இருக்கின்றன. பால்ரீதியில் நூற்றுக்கு நூறு என்பது முழுக்கக் கற்பனை. பெண்ணின் வயிற்றில் கருவாகி வெளியே வரும் எந்தவொரு குழந்தையிடமும் எப்படியும் பெண் சாயல் நிச்சயம் இருக்கும். ஒருக்கால் ஆணின் வயிற்றில் கருவாகி உருவாகும் ஆண் குழந்தை எனில் முழுக்க ஆண் தன்மையுடன் இருக்க வாய்ப்புண்டு. மக்களைப் பெரிய அளவில் கவர்ந்திடும் ஆண் நடிகர், பாடகர், தலைவர், சாமியார் போன்றோரின் உடல்கள் கணிசமாகப் பெண் தன்மையில் தோய்ந்திருக்கும். சமூகத்தில் பிரபலமான பெண்ணுடலில் ஆண்தன்மை மெலிதாகப் பொதிந்திருக்கும். எனினும் உடல்களை முன்னிறுத்தி ஆண், பெண் என அரசியலை உருவாக்குவது பழங்காலத்திலேயே தொடங்கிவிட்டது. மறுஉற்பத்தியில் ஈடுபடும் வல்லமை மிக்க பெண்ணால் உருவாக்கப்பட்ட குடும்பம், காலப்போக்கில் பெண்ணுடல் காரணமாக அவளை அடக்கியொடுக்கத் தொடங்கியது. இந்நிலை இன்றுவரை தொடர்கின்றது. இத்தகு சூழலில் ஆணும் பெண்ணும் கலந்த உடல்களைத் தமிழ்ச் சமூகம் எங்ஙனம் எதிர் கொண்டது என்பது முக்கியமான கேள்வி.

மனித உடல் என்பது ஆன்மீகத் தேடலுக்குத் தடை என வைதிக சநாதன சமயம் போதித்தது. உடலைக் கடப்பதற்கான முயற்சியுடன் பிறவியைக் கேவலமாகக் கருதும் மனப்போக்கு நிலவியது. மனித உடல், புலன்களின் வழியாக அடையும் கொண்டாட்டங்களும் வலிகளும் ஏராளம். புலன்களை ஒடுக்குதலை முதன்மைப்படுத்தும் சமய மேலாதிக்கம், உடலை வற்புறுத்துவதன் மூலம் ஈடேற முடியும் எனக் கற்பித்தது. தவம், விரதம், வேண்டுதல் மூலம் உடல்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்படுகின்றன. மறு உற்பத்திக்கு ஆதாரமாக இயற்கையாக உடலில் தோன்றும் பாலியல் விழைவினைச் சிற்றின்பம் எனக் கேவலமாக ஒதுக்குவது கற்பிக்கப்பட்டது. இதனால் பாலியல் வேட்கையைத் துய்க்கும் உடல்கள், ஒருநிலையில் குற்ற மனநிலைக்குள்ளாகின. பூமியில் மனித உடல்கள் இயல்பாக நுகர வேண்டியவற்றை மறுதலித்துவிட்டு, அப்பாலை உலகம் பற்றிய கற்பனையை முதன்மைப்படுத்துவது ஆதிக்க அரசியல் சார்ந்தது. ஆண் உடலுக்கான கொண்டாட்டம் தவறு என்ற போதனையில், பெண்ணுடல், திருநங்கை உடல் பற்றிய பேச்சுக்கே இடமில்லை. உடலை அடக்கியொடுக்கி, வருத்தி இருத்தலே "வீடுபேறு" அடைதலுக்கான வழி என்ற போதனையில், பெண் மனம் கொண்ட ஆண் உடல் அல்லது ஆண் மனம் கொண்ட பெண்ணுடல் பட்ட வேதனைகள், மகிழ்வுகள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டன. உடலைக் கேவலமாகக் கருதும் பொதுப் புத்தி நிலவும் தமிழ்ச் சமூகத்தில், உடலே முதன்மைப் பிரச்சினையாகக் கொண்டுள்ள திருநங்கைகளுக்கான சமூகவெளி மிகக் குறுகியது. அதிலும் ஆண் மேலாதிக்கம் நிலவும் சூழலில் திருநங்கையர்களை மிகக் கேவலமாகக் கருதும் போக்குத்தான் நிலவுகிறது. அவர்களை மனித உயிராகக்கூடக் கருதவில்லை என்பதுதான் கசப்பான உண்மை.

ஏதோ ஒரு குழந்தை வளர்ச்சியடையும் போது, ஒரு காலகட்டத்தில் உடல், மனரீதியில் திருநங்கைக்கான அடையாளங்களைப் பெறுகின்றது. ஒட்டுமொத்தச் சமூகம், திருநங்கையைக் கேவலமாகவும் இழிந்தவர்களாகவும் நடத்துவதை நேரில்

கண்டும், திருநங்கையாகத் தன்னை உணரும் உடலின் தீவிரம் குறைவதில்லை. ஆண் X பெண் என்ற எதிரிணைக்கு மாற்றாக இயற்கை படைத்திருக்கும் திருநங்கை எல்லோரையும் போலவே வாழ்வதற்கான எல்லா உரிமையும் பெற்றிருக்கிறாள்/து. திருநங்கையின் தோற்றம், நடை, உடை, பாவனை பற்றி, கி.பி 14-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட திவாகர நிகண்டு விரிவான குறிப்புத் தந்துள்ளது.

**பேடி இலக்கணம் பேசுங்கலை**
**நச்சுப் பேசலும் நல்லுரை ஓர்தலும்**
**அச்சு மாறியும் ஆண் பெண் ஆகியும்**
**கைத்தலம் ஒன்றைக் கடுக வீசியும்**
**மத்தகத்து ஒருகை மாண்புற வைத்தலும்**
**விலங்கி மிதித்தும் விழிவேறு ஆகியும்**
**துளங்கித் தூங்கிச் சுழன்று துணிந்தும்**
**நாக்கு நாணியும் நடம்பல பயின்றும்**
**பக்கம் பார்த்தும் பவ்வி திருத்தியும்**
**காரணம் இன்றிக் கதம்பல கொண்டும்**
**வார் அணி கொங்கையை வலிய நலிந்தும்**
**இரங்கியும் அழுதும் அயர்ந்தும் அருவருத்தும்**
**குரங்கியும் கோடியும் தோதுகள செய்தும்**
**மருங்கில் பாணியை வைத்தும் வாங்கியும்**
**இரங்கிப் பேசியும் எல்லேல் என்றும்**
**இன்னவை பிறவும் இயற்றுதல் இயல்பே**
**(திவாகர நிகண்டு)**

திருநங்கையின் தோற்றம், இயல்பு, பேச்சு பற்றி திவாகர நிகண்டு தந்துள்ள விளக்கம் நுட்பமான பதிவாகும்.

**சூடாமணி நிகண்டு, திருநங்கை குறித்துத் தரும் விளக்கம் பின்வருமாறு:**

பெண்டகன் - பெண்தன்மை மிக்கவன்
பேடி - ஆண்தன்மையற்ற பெண்ணுருவம் மிக்கவன்
நபுஞ்சகன் - ஆண் பெண் அல்லாதது
சண்டன் - பால் உணர்வற்றவன்

ஆண்தன்மை மிக்க பெண்ணைப் “பேடன்” என்ற சொல்லால் பிங்கல நிகண்டு குறிக்கின்றது. தமிழில் ஆய்த எழுத்தைப் பேடியெழுத்து எனக் குறிக்கும் வழக்கம் உள்ளது.

வரலாற்றுப் பாரம்பரியமுடைய தமிழர் வாழ்க்கையானது காலந்தோறும் பல்வேறு மாற்றங்களை எதிர்கொண்டுள்ளது. வைதிக சநாதன சமய மேலாதிக்கம் காரணமாகப் பிறப்பின் அடிப்படையில் உடல்கள் தீட்டாகக் கருதி ஒதுக்கப்பட்டன. சுத்தம் X அசுத்தம் என்ற நிலையில் பெண்ணுடல்களும் தீட்டாக்கப்பட்டன. விளிம்புநிலையினர் சமூகப் பொதுவெளியில் பங்கேற்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இத்தகைய சூழலில் தமிழ்ச் சமூகத்தில் சிறிய குழுவினரான திருநங்கைகள் அடையாளம் எதுவுமற்ற நிலையில் முழுக்கப் புறக்கணிக்கப்பட்டனர். கல்வி என்பது உயர் சாதியினருக்குரியதாக ஒதுக்கப்பட்ட நிலையில் விளிம்பு நிலையினரான திருநங்கை, பெண்கள், தலித்துகள் போன்றோருக்குக் கல்வி கற்றல் உரிமை மறுக்கப்பட்டிருந்தது. இதனால் திருநங்கைகளின் கொண்டாட்டமும் வலியும் இலக்கியப் படைப்புகளில் பதிவாக்குவதற்கான சாத்தியம் இல்லாமல் போனது. பழந்தமிழ் இலக்கியப் பரப்பில் திருநங்கைகளின் குரல் அல்லது திருநங்கைகளுக்கு ஆதரவான குரல் என்றோ எதுவுமில்லை. இலக்கண விளக்கத்திலும் இலக்கிய விவரிப்பிலும் தகவலாகப் பதிவாகியுள்ளவற்றிலிருந்து திருநங்கை பற்றிய விளக்கங்களைத் தொகுக்க வேண்டியுள்ளது. சங்க காலத்திலிருந்து தமிழகத்தில் திருநங்கைகள் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர் என்பதற்கான சான்றுகளை இலக்கியப் படைப்புகளிலிருந்து அறிய முடிகிறது.

பண்டைய இலக்கண நூலான தொல்காப்பியத்தில் சொற்களை அமைத்துப் பொருள்

கொள்ளுதல் பற்றிக் குறிப்பிடுகின்ற தொல்காப்பியர், உயர்திணை, அஃறிணை என இரண்டாகப் பாகுபடுத்தியதுடன், பேடியும் தெய்வமும் உயர்திணையில் அடங்கும் என்கிறார்.

**பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்**
**ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்**
**தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்**
**இவ்வென அறியுமந் தந்தமக் கிலவே**
**உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்**
**(தொல்காப்பியம்,சொல்லதிகாரம், சூத்திரம்: 4)**

“பெண்பால் என்று கருதுவதற்குக் காரணமான ஆணுக்குரிய ஆண் தன்மை திரிந்த” எனக் குறிப்பிடப்படும் திருநங்கை வந்தான்/ வந்தாள்/ வந்தார் எனக் கூற வேண்டும் என இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. “பெண்மை சுட்டிய” என்ற சொல்லுக்கு அலியன்று எனவும் “ஆண்மை திரிந்த” என்ற சொல்லுக்குப் பெண் அன்று எனவும் உரையாசிரியர் சேனாவரையர் விளக்கம் தந்துள்ளார். மேலும் எடுத்துக்காட்டில் பேடி, பேடியர் என்ற சொற்களைப் பயன்படுத்தி திருநங்கையைக் குறித்துள்ளார்.

**ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி**
**ஆண்மை அறிசொற் காகிட னின்றே.**
**(தொல்காப்பியம், சொல்லதிகாரம், சூத்திரம்: 12)**

ஆண் தன்மை திரிந்து பெண்மை நோக்கிய பெயர்ச்சொல், ஆணை அறிவிக்கும் இறுதி எழுத்துடன் பொருந்தாது என்று விளக்கும் உரையாசிரியர் இளம்பூரணார், அச்சொல் சிறுபான்மையாகப் “பேடி வந்தான்” எனவும் வர வாய்ப்புண்டு என்கிறார். ஆண் தன்மையிலிருந்து திரிந்தவர்களைப் பெண் பாலினுள் சேர்க்க வேண்டும் என்பது தொல்காப்பியரின் கருத்தாக உள்ளது.

திருநங்கை வந்தாள்/ அரவாணி வந்தான்/ திருநங்கை வந்தார் ஆகிய மூன்று வாக்கியங்களில் எதைச் சரியெனக் கொள்வது என ஆராயப் புகுந்த தொல்காப்பியருக்குத் திருநங்கை வந்தாள் என்பதே சரியென்ற முடிவுக்கு வந்துள்ளார். எனவே மனத்தாலும், உடலாலும் தன்னைப் பெண்ணாக நினைத்துச் செயற்படும் ஆணைப் பெண் எனக்கொள்ள வேண்டும் என்ற தொல்காப்பியரின் கருத்து ஏற்புடையதே.

கி.பி 12-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இலக்கண நூலான நன்னூலில் திருநங்கை பற்றிய குறிப்புகள் உள்ளன.

**பெண்மைவிட்டு ஆண் அவா வுவபேடு ஆண்பால்**
**ஆண்மைவிட்டு அல்லது அவாவுவ பெண்பால்**
**இருமையும் அஃறிணை அன்னவும் ஆகும்**
**(நன்னூல், சூத்திரம்:264)**

பெண் தன்மையைவிட்டு ஆண் தன்மையை விரும்புகிற “பேடு” ஆண் பாலாகும். ஆண் தன்மையைவிட்டுப் பெண் தன்மையை விரும்புகின்ற “பேடு” பெண் பாலாகும். இவ்விரு வகையான பேடுகளும் அஃறிணையாகவும் வரும். ஆண்மை குறைந்து பெண்மை மிகுந்திருப்பவர் “பேடி” எனவும், பெண்மை குறைந்து ஆண்மை மிகுந்திருப்பவர் “அலி” எனவும் குறிக்க வேண்டும் என்பது உரையாசிரியர் கருத்து.

நன்னூலார் உயர்திணையில் ஆண் பெண் ஆகியோரை அடக்கிவிட்டு, புறனடையாக திருநங்கைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, பிறப்பினால் ஆண் ஆன ஒருவனுக்கு பெண் தன்மை மிகுந்தால், பெண் எனக் கருத வேண்டும் எனவும், பிறப்பினால் பெண் ஆன ஒருத்திக்கு ஆண் தன்மை மிகுந்தால் ஆண் எனக் கருத வேண்டும் எனவும் வரையறுத்துள்ளார். இலக்கண அடிப்படையில் சொல்லாராய்ச்சியில் ஈடுபட்ட இலக்கணக்காரர்கள், ஆண்,பெண் என்ற இரு பாலினங்களுக்கு அப்பால் மூன்றாம் பாலினமாகத் திருநங்கையை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இனக்குழுச் சமூக வாழ்க்கை சிதைவடைந்து அரசு தோன்றுவதற்கான சாத்தியப்பாடுகள் வலுவடைந்த சங்ககாலத்தில் வீரமும் காதலும் முன்னிலைப்படுத்தப்பட்டன. குடிகளாக வாழ்ந்த தமிழரிடையே உமணர், கொல்லர், குயவர், புலையர், புலவர், குறவர், எயினர் போன்ற பலரும் ஒத்திசைந்து வாழ்ந்தனர். யாரும் இழிவானவர்களாகக் கருதப்படவில்லை. புறநிலையில் நிலத்தைத் துய்ப்பதும், அகநிலையில் பெண்ணுடலைத் துய்ப்பதும் ஆணுக்கான அடையாளமாக வலியுறுத்தப்பட்ட நிலையில், திருநங்கை போன்ற விளிம்புநிலையினர் பாடுபொருளாக அமையும் வாய்ப்புக் குறைவு. இல்லாவிடில் அத்தகைய பாடல்கள் தொகுப்பாளர்களால் புறக்கணிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**பேடிப் பெண்கொண்டு ஆடுகை கடுப்ப**

**(அகநானூறு, பா எண்: 206)**

என்ற பாடல் வரியானது, "கள் குடித்து மகிழ்வுடன், பேடிப் பெண் உருவத்துடன் கூத்தாடுகிறவன் பின்சென்று" என்ற பொருளைத் தருகின்றது. சங்க காலத்தில் பேடி எனப்பட்ட திருநங்கை பொது இடத்தில் கூத்தாடுவது நடைபெற்றது என்று அறிய முடிகின்றது. சங்க இலக்கியதில் திருநங்கை பற்றிய தகவல் இடம் பெறாமைக்கு, அன்றைய வீரயுக மனநிலையும் காரணமாக இருக்க வாய்ப்புண்டு.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறளில் திருநங்கை பற்றிய தகவல்கள் இடம் பெற்றுள்ளன. அறத்தை முன்னிறுத்திய அறநூல்களில் திருநங்கையை இழிவாகக் கருதும் போக்குப் பதிவாகியுள்ளது.

**பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து**
**அஞ்சும் அவன்கற்ற நூல்.**

**(திருக்குறள் : 727**

அவையினில் அஞ்சுகின்றவன் கற்ற நூல், பகைவரின் நடுவில் அஞ்சுகின்ற பேடியின் கையில் இருக்கும் கூர்மையான வாள் போன்றது.

**தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை**
**வாளாண்மை போலக் கெடும்.**

**(திருக்குறள் : 614)**

முயற்சி இல்லாதவன் பிறருக்கு உதவி செய்ய முயலுவது, பேடி தன்னுடைய கையில் வாளை எடுத்து ஆண்மையைக் காட்டுவது போன்றதாகும்.

திருநங்கையினால் வாளை ஏந்திப் பகைவருடன் போரிட முடியாது என்ற கருத்தானது வள்ளுவரால் இழிவுப்பொருளில் கையாளப்பட்டுள்ளது. மகப்பேறு, குழந்தை வளர்ப்பு, கணவனுக்காகக் காத்திருத்தல், வீட்டு வேலைகள் எனப் பெண்ணின் இயக்கம் குடும்பம் என்ற அலகினுக்குள் சுற்றி வரும் வேளையில் சண்டை, போர், கொலை போன்றவற்றைப் பெண்கள் இன்றளவும் புறக்கணித்து வருகின்றனர். மறு உற்பத்தியில் ஈடுபடும் ஆற்றல் வாய்ந்த பெண் இயற்கையோடு இயைந்தநிலையில் பேராற்றல் மிக்கவள். சமூக மதிப்பீட்டில் ஆண் உருவகிக்கும் வீரம் பற்றிய புனைவுகளைப் பெண் புறந்தள்ளுகிறாள். உடலால் ஆணாக இருப்பினும் மனத்தாலும் செயலாலும் பெண்ணாக இருக்கும் திருநங்கையின் இயல்பானது பெரும்பாலும் பெண்ணை ஒத்ததுதான். எனவே தான் அறிவுத்திறன் மிக்க திருநங்கைகள் சண்டை சச்சரவிலிருந்து ஒதுங்கியே வாழ்கின்றனர். இத்தகைய திருநங்கை கையில் வாள் ஏந்திப் போரிட அஞ்சும் கோழை என்ற பொதுப் புத்தியை உவமை நிலையில் திருவள்ளுவர் தனது குறள்களில் கையாண்டுள்ளார்.

முற்பிறவியில் தீய செயல் செய்த ஆண் இப்பிறவியில் திருநங்கையாகப் பிறப்பான் என்று நாலடியார் பாடல் குறிக்கின்றது.

**செம்மையொன் றின்றிச் சிறியார் இனத்தராய்க்**
**கொம்மை வரிமுலையால் தோள்மரீஇ - உம்மை**
**வலியால் பிறர்மனைமேல் சென்றாரே இம்மை**
**அலியாக ஆடிஉண் பார்.**

**(நாலடியார் பா.எண் 85)**

போன பிறவியில் தனது வலிமையினால் நல்லொழுக்கம் இன்றி, பிறர் மனைவியான அழகிய கோலம் எழுதப்பட்ட முலைகளுடையவளின் தோளைச் சேர விரும்பிச் சென்றவரே இப்பிறவியில் அலியாகிக் கூத்தாடி உண்டு வாழ்வார்.

திருநங்கையைக் குறிக்கும் பேடி என்ற சொல், அலி என்ற வசைச்சொல்லாக மாற்றமடைந்துள்ளது. மேலும் அலியாகப் பிறப்பது இயற்கையின் விநோதம் என்ற நியதியை மறுத்துட்டு, பாவச் செயலுக்கான தண்டனை என்ற புதிய அறத்தை நாலடியார் குறிக்கின்றது. திருநங்கை தனது வயிற்றுப் பாட்டுக்காக கூத்தாடிப் பிழைக்க வேண்டிய நிர்பந்தம் அன்றைய காலகட்டத்திலேயே தொடங்கி விட்டது என்பதையும் இப்பாடலின் மூலம் அறிய முடிகின்றது. சமூக மதிப்பீட்டில் திருநங்கையின் பிறப்பானது தீவினைப் பயன் என்ற புதிய கருத்து ஏற்பட்டதற்கான காரணங்கள் ஆய்விற்குரியன.

***நுண்ணுணர்வு இன்மை வறுமை அஃதுடைமை***
***பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம் - எண்ணுங்கால்***
***பெண்ணவாய் ஆணிழந்த பேடி அணியாளோ***
***கண்ணவாத் தக்க நலம்.***
***(நாலடியார் பா.எண் 251 )***

மனிதர்க்கு அறிவின்மை வறுமை; அறிவுடைமை பெரும் செல்வம். பெண் தன்மை மிகுதியாகி ஆண் தன்மை குறைந்த பேடி கண்களைக் கவரும் அணிகலன்களை அணிய மாட்டாளோ? அணிந்து கொள்வாள். அறிவில்லாதவன் வைத்திருக்கும் அளவற்ற செல்வம், திருநங்கை அணிந்திருக்கும் அழகிய அணிகலன்கள் போன்றது என இழிவுப்பொருளில் திருநங்கையின் தோற்றம் விமர்சனப்படுத்தப்பட்டுள்ளது.

நீதியைப் போதிக்கும் “முதுமொழிக் காஞ்சி” என்ற அறநூல் சித்தரிக்கும் பேடி பற்றிய மதிப்பீடு, இழிவானதாக உள்ளது.

***கழிதறு கண்மை பேடியின் துவ்வாது***
***(முதுமொழிக் காஞ்சி, துவ்வாப்பத்து, பா.எண் : 2)***

அஞ்ச வேண்டிய இடத்தில் அஞ்சாமல் பிறரை வருத்துகின்றவர், பேடியைக் காட்டிலும் கீழானவர். தனிமனிதனின் இயல்பு அல்லது தவறான செயல் குறித்து இடித்துரைக்க முயலுகையில், கீழான நிலையில் திருநங்கையை வைத்து, அவருடன் ஒப்பிட்டுச் சொல்லப்பட்ட அறிவுரை, திருநங்கை பற்றிய சமூக மதிப்பீடாக உள்ளது. பேடி எனப்படும் திருநங்கையால் யாருக்கும் எந்தத் தீங்கும் ஏற்படாத நிலையில், மோசமான செயலைச் செய்யும் நபரைக் கண்டனம் செய்ய திருநங்கையைப் பயன்படுத்தியுள்ளது, அன்றைய சூழலின் வெளிப்பாடாகும்.

தமிழில் காப்பியம் செழித்தோங்கிய காலகட்டத்தில், ஏற்கெனவே நிலவிய குறுநில அரசுகள் சிதைவடைந்து, மூவேந்தர் எனப்படும் சேர, சோழ, பாண்டிய அரசுகள் வலுவடைந்தன. தொடர்ச்சியான போர்களின் மூலம் நிலமானது பேரரசின் ஆளுகைக்குக் கீழ் கொண்டு வரப்பட்டது. ஜைன,பௌத்த சமயங்கள் செல்வாக்குப் பெற்றன. அச்சமயங்களின் கருத்துகளுக்கு முன்னுரிமை தரும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, குண்டலகேசி, நீலகேசி போன்ற காப்பியங்கள் வெளியாகின. அன்றைய காலகட்டத்தில் திருநங்கைகள் மன்னர்கள் வாழும் அரண்மனைகளில் பணிமகளிராக வாழ்ந்து வந்தனர்; அரசியருக்குத் தோழியராகவும் விளங்கினர் எனக் காப்பியங்கள் மூலம் அறிய முடிகிறது.

சிலப்பதிகாரத்தில் சேர மன்னரான செங்குட்டுவனின் பட்டத்தரசி வேண்மாள், நிலவின் எழிலைக் காண நிலா முற்றத்திற்கு வருகின்றாள். அப்பொழுது அவளுக்குப் பல்லாண்டு கூறி வரவேற்கின்றனர் பணியாளர்கள். அக்காட்சி பற்றிய சித்தரிப்புப் பின்வருமாறு:

*வதுவை வேண்மாள் மங்கல மடந்தை
மதி ஏர் காணிய வருவழி
எல்வளை மகளிர் ஏந்திய விளக்கம்
பல்லாண்டு ஏத்தப் பரந்தன ஒருசார்
மண்கணை முழவும் வளர்கோட்டு யாழும்
பண் உனி பாடலும் பரந்தன, ஒருசார்
மான்மதச் சாந்தும் வரிவெண் சாந்தும்
உனும் குறளும் கொண்டன, ஒருசார்
வண்ணமும் அண்ணமும் மலர்பூம் பிணையலும்
பெண் அணிப் பேடியர் ஏந்தினார், ஒருசார்
(சிலப்பதிகாரம், நடுகல்காதை : வரி: 51-60)*

வளையல் அணிந்த மகளிர் ஏந்திய விளக்கொளி ஒரு புறம் பரவியது; மத்தளமும் யாழும் எழுப்பிய இசையுடன் பண் கனிந்த பாடல் ஒருபுறம் பரவியது. கத்தூரிச் சாந்தும், தொய்யில் எழுதுவதற்கான சாந்தும் ஏந்திய உனரரும் குறளரும் ஒருபுறம் நின்றனர். வண்ணக் குழம்புகளையும், நறுமணம் மிக்க சுண்ணப் பொடிகளையும் மலர்ந்த மலர் மாலைகளையும் ஏந்தியவராகப் பெண் தன்மை மிக்க பேடியர் ஒருபுறம் நின்றனர். அன்றைய சமூகம் திருநங்கைகளைப் புறக்கணிக்கவில்லை என்பதற்கு இப்பாடல் வரிகள் சான்றாக விளங்குகின்றன. திருநங்கைகள் பொதுச் சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிலையை அறிய முடிகிறது.

சிலப்பதிகாரம், நீர்ப்படைக் காதையில் கனக விசயருக்கு எதிரான போரில் வென்ற சேர மன்னன், தோற்ற பகை மன்னர்களையும், கனக விசயரையும், ஆரியப் பேடிகளையும் சோழ, பாண்டிய மன்னர்களிடம் காட்டி வருமாறு ஆணையிடுகிறான். அப்பொழுது இளங்கோ வருணிக்கும் பேடி பற்றிய தோற்றம் முக்கியமானது.

*அரிபரந்து ஒழுகிய செழுங்கயல் நெடுங்கண்
விரிவெண் தோட்டு வெண்நகை துவர்வாய்
சூடக வரிவளை ஆடுஅமைப் பணைத்தோள்
வளர்இள வனமுலை தளிர்இயல் மின்னிடை
பாடகச் சீறடி ஆரியப் பேடியோடு
. . .
(சிலப்பதிகாரம், நீர்ப்படைக்காதை: வரி: 182-186)*

செவ்வரி படர்ந்த செழுமையான கயல்மீன் போன்ற நீண்ட கண்களும் மலர்ந்த வெள்ளிய மலர் மாலையும் வெண்பற்களும் பவழவாயும் கையில் அணிந்த சூடகம் என்ற வளையும் அசைகின்ற மூங்கிலையொத்த பருத்த தோள்களும் வளர்கின்ற இளமையும் வனப்பும் மிக்க முலையும் தளிர்நடையும், மின்னல் இடையும் சிலம்பணிந்த சிற்றடியை உடைய ஆரிய நாட்டுப் பேடி என விவரிக்கப்படும் பேடியின் அழகும் தோற்றமும் கவனத்திற்குரியன. இங்குக் குறிப்பிடப்படும் ஆரியப் பேடி என்பது, போரில் தோற்றுப் பேடி வேடமணிந்து தப்பியவர்களைக் குறிக்கும் என உரையாசிரியர்கள் கருதுகின்றனர். வளர்கின்ற வனப்பான இளமுலை, பேடி வேடமணிந்தவருக்கு ஏற்பட வாய்ப்பில்லை; பேடி போன்ற நடை, பாவனை போன்றவையும் வர வாய்ப்பில்லை. வடபுலத்திலிருந்து அழகிய திருநங்கை களைச் சேர மன்னன் தமிழகத்திற்குக் கொண்டு வந்தான் என்ற கருத்தே ஏற்புடையது. அன்றைய காலகட்டத்தில் அரண்மனைகளில் திருநங்கைகள் ஏற்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருந்தனர் என்பதற்கு இப்பாடல் வரிகள் ஆதாரமாக உள்ளன.

கடலாடு காதையில், மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல்களில் பேடி ஆடலும் ஒன்று.

*ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்துக்
காமன் ஆடிய பேடி ஆடலும்
(சிலப்பதிகாரம், கடலாடு காதை.வரி:56-57)*

அநிருத்தனைச் சிறை மீட்பதற்காக, வாணாசுரனுடைய "சோ" நகரத்துத் தெருக்களில் மன்மதன், ஆண்மைத் தன்மையிலிருந்து வேறுபட்டுப் பெண்மைக் கோலத்துடன் ஆடிய ஆடல் பேடிக் கூத்து எனப்படுகிறது. புராணக் கதையெனினும் ஆண், பெண்மைக் கோலத்துடன் ஆடும் பேடிக் கூத்து வழக்கிலிருந்ததைச் சிலப்பதிகாரம் மூலம் அறிய முடிகின்றது.

மணிமேகலை காப்பியத்தில் மணிமேகலை மலர் கொய்யச் செல்லும்போது, அவளது அழகைக் காணும் ஆடவரின் செயல் பற்றிய விவரிப்பு குறிப்பிடத்தக்கது.

**ஆடவர் கண்டால் அகற்றலு முண்டோ**
**பேடிய ரன்றோ பெற்றியின் நின்றிடின்**
**(மணிமேகலை, மலர்வனம் புக்கக் காதை, பா வரி: 24-25)**

மணிமேகலையின் பேரழகைக் கண்ட ஆடவரால் கண்களைத் திருப்ப முடியாது. அவளைக் கண்ட பிறகு ஒருவன் இயல்பாக இருந்தால் அவன் பேடி ஆவான் என்று சுதமதி குறிக்கின்றாள். ஆடவரை மயங்கச் செய்யும் பெண்ணின் பேரழகு, பேடியருக்கு ஒரு பொருட்டாகாது என்பதை இவ்வரிகள் புலப்படுத்துகின்றன. பால்ரீதியாகப் பேடிக்குப் பெண்ணின்மீது பாலியல்வேட்கை இல்லை என்பது முக்கியமான தகவல்.

மணிமேகலை தனது தோழி சுதமதியுடன் மலர் கொய்யச் செல்லும்போது வீதியில் நடைபெறும் பல்வேறு காட்சிகளைக் காண்கிறாள். அவற்றில் ஒன்று பேடியின் ஆடல். பேடியின் தோற்றத்தைச் சாத்தனார் நுணுக்கமாக வருணித்துள்ளார்.

**பவளச் செவ்வாய் தளவவாள் நகை**
**ஒள் அரி நெடுங்கண் வெள்ளி வெண்தோட்டு**
**கருங்கொடிப் புருவத்து மருங்கு வளைபிற நுதல்**
**காந்தள் அம்செய்கை ஏந்து இளவனமுலை**
**அகன்ற அல்குல் அம்நுண் மருங்குதல்**
**இதந்த வட்டுடை எழுதுவரி கோலத்து**
**வாணன்பேர் ஊர் மருவிடைத் தோன்றி**
**நீள்நிலம் அளந்தோன் மகன்முன் ஆடிய**
**பேடிக்கோலத்துப் பேடு காண்குநரும்**
**(மணிமேகலை, மலர்வனம் புக்க காதை, பா.வரி: 117-125 )**

பவளம் போன்ற சிவந்த வாய், ஒளி தவழும் எயிறு, செவ்வரி படர்ந்த நீண்ட விழிகள், வெண்சங்கு தோடு அணிந்த காது கள், கரிய புருவம், வளைந்த பிறை நிலவு போன்ற நெற்றி, காந்தள் மலர் போன்ற கைவிரல்கள், ஏந்திய இளமையான அழகிய முலை, அகன்ற அல்குல், வட்டுடை என திருநங்கையின் தோற்றம் விவரிக்கப்பட்டுள்ளது. திருநங்கையின் பேடி ஆட்டம் தெருவில் நிகழ்கின்றது என்ற தகவல்மூலம் அன்றைய காலகட்டத்தில் திருநங்கைகள் பொது வெளிக்குள் செயல்பட்டனர் என அறிய முடிகின்றது.

அரண்மனையில் இளவரசிக்குத் தோழியாகத் திருநங்கை இருந்தாள் என்று சீவக சிந்தாமணி காப்பியம் குறிப்பிட்டுள்ளது.

**தளையவிழ் கோதை பாடித்தான் அமர்ந்து இருப்பத்தோழி**
**விளைமதுக் கண்ணி வீணாபதியெனும் பேடி வேல்கண்**
**இளையவன் பாட வீரர் ஏழால்வகை தொடங்கல் அன்றே**
**வளையவன் எழாவின் மைந்தர் பாடு கவல்லை என்றாள்**
**வேயேதிரள்மென்தோள்வில்லகொடும்புருவம்**
**வாயே வளர்பவளம் மாந்தளிரே மாமேனி**
**நோயே முலை சுமப்பது என்றவர்க்கு அருகியிருந்தார்**
**ஏயே இவளொருத்தி பேடியோ என்றார்**
**எரிமணிப்புன் மேகலையாள் பேடியோ என்றார்**
**(சீவக சிந்தாமணி, காந்தருவதத்தையார் இலம்பகம், பா.எண்: 651-652 )**

மலர் மாலை அணிந்த காந்தருவதத்தை என்னும் இளவரசி, பலநாட்டு மன்னர் குழுமியிருக்கும் அவையில் பாடிவிட்டு யாழை இசைக்க முயலுகிறாள். அவள் தோழியாகிய வீணாபதி என்னும் பேடி, வேல் போன்ற விழிகளையுடைய தத்தை பாடும்போது, அதற்கேற்ப வீர்ர்கள் யாழின் இசையை மீட்டுங்கள், இல்லையெனில் பாடுங்கள் என ஏவுகின்றாள். தத்தையின் இசையுடன் இசைந்து யாழினை இசைக்க முடியாத மன்னர்கள் திண்டாடுகின்றனர். இதனால் கோபமடைந்த மன்னர்கள் பேடியான வீணாபதியைப் பகடி செய்கின்றனர். அப்பொழுது வீணாபதியைப் பார்த்து, இவளது மெல்லிய தோள் மூங்கிலோ? வளைந்த புருவம் வில்லோ? உடல் மாந்தளிர் நிறமோ? ஆயினும் இவளுக்கு முலையைச் சுமத்தல் நோயோ?" என்று பகடி செய்தனர். மேலும் சிலர் "இவள் பேடியோ" எனச் சந்தேகப்பட்டனர். வேறு சிலர், "மேகலை அணிந்த தத்தையின் பேடியோ" என்றனர்.

இளவரசியுடன் வந்து, பிற மன்னர்களை ஏவல் செய்யும் வல்லமை படைத்தவராகப் பேடியாகிய வீணாபதி இருப்பது, அன்றைய காலகட்டத்தில் திருநங்கைகள் பெற்ற சமூக அங்கீகாரத்தின் வெளிப்பாடாக உள்ளது. மன்னரின் எதிரில் நின்று மன உறுதியுடன் கருத்தைச் சொல்லுமளவு பேடியின் நிலை சித்தரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஜைனக் காப்பியமான நீலகேசி, அன்றைய தமிழகத்தில் சமயங்களுக்கிடையில் நடைபெற்ற பூசல்களை முன்னிலைப்படுத்துகின்றது. நீலகேசி என்ற பெண்ணை மையப்படுத்திடும் இக்காப்பியத்தில் பல்வேறு சமூகப் பதிவுகள் இடம்பெற்றுள்ளன. திருநங்கையின் மனவலிமையை நீலகேசி பதிவு செய்துள்ளது.

**பேடி வேத னைபெரி**
**தோடி யூரு மாதலாற்**
**சேடி யாகு வன்மையிற்**
**கூடி யாவ தில்லையே**

**(நீலகேசி, பா.எண் : 96)**

இந்நகரில் வீழும் உயிர்கள் பெண் தன்மையாதல், ஆண் தன்மையாதல் உடையன அல்ல. எனவே இவர்கள் காதல், புணர்ச்சியில் கூடி இன்பமடைவதில்லை. பால்ரீதியில் பேடிக்கு ஏற்படும் துன்பம் பெரியதாகும். ஓர் ஆணும், ஒரு பெண்ணும் புணர்ந்து பிள்ளை பெற்றுக்கொள்வது இயற்கையானது. ஆனால் திருநங்கையால் குழந்தை பெற்றுக்கொள்ள முடியாது என்ற நிலையானது, அவர்களுக்குப் பெரிய வேதனையைத் தருகிறது. பூமியில் பெண்ணின் வயிற்றிலிருந்து பிறக்கும் திருநங்கைக்குப் புதிதாக உயிரை உருவாக்குவதற்கான ஆற்றல் இல்லை என்ற தகவலை நீலகேசி பதிவு செய்துள்ளது. திருநங்கைகள் ஒன்று சேர்ந்தாலும் மகப்பேறு இல்லை என்பதைப் பின்வரும் பாடல் உணர்த்துகின்றது.

**கூடியு மாகாக் குணத்தின் நீயவட்**
**பாடி யுரைத்த வுயிரும் பகுதியும்**
**பேடிகள் சாரினும் பிள்ளை பெறாமையை**
**நாடியுங் காணென்று நண்ணுத னக்காள்**

**(நீலகேசி, பா.எண் :764 )**

நீலகேசி ஜைன சமயத்திற்கு ஆதரவாகப் பிற சமயத்தவருடன் வாதிடும்போது, எதிர் கருத்தினை மறுப்பதற்காக, "பேடிகள் தம்முள் கூடினாலும் பிள்ளை பெறாமையை அறிவாயாக" என்று குறிப்பிட்டுள்ளார். திருநங்கைகளுக்கு இடையிலான புணர்ச்சி நிகழ்ந்தாலும், குழந்தைப் பிறப்பு இல்லை என்பது, திருநங்கைகளின் பால் வேட்கை பற்றிப் புதிய தகவலைத் தந்துள்ளது.

**ஏழா யவைவிந் தெண்பத்து நான்கு நூறாயிரமாம்**
**போழா மவற்றுப் புரையின் விகற்படும் பொற்றொடியாய்**
**கீழா ரலிகள் முழுச்செவி கிண்ணர்க ளெண்ணிகந்த**
**வூழாம் பிறப்புமுவ் வாதாமல் லாகுரு வொப்பினரே**

**(நீலகேசி, பா.எண் :76 )**

கீழான நரகத்தினர், தவக்கோட்பாடு இல்லாதவரும், அலிகளும் கண்ணும் செவியும் கருநிறமுடையவரும் ஆகி எண்ணிக்கையற்ற முறைமையினை உடைய பிறப்பும் உருவும் பொருந்தியவர் ஆவர். இப்பாடலில் திருநங்கைப் பிறப்பு என்பது தண்டனையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜைன சமயக் கருத்துகளை எதிர்த்து சைவ, வைணவ சமய எழுச்சி காரணமாக உருவாக்கப்பட்ட பக்தி இயக்கக் கால கட்டத்தில் பன்னிரு திருமுறைகளும், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தமும் அடிப்படையான சமய நூல்கள். இறைவன் பற்றிய புரிதலில் ஆண், பெண், திருநங்கை ஆகிய மூன்று நிலைகளிலும் அணுகுதல் வலியுறுத்தப்பட்டுள்ளது. அர்த்தநாரீஸ்வரர் எனப்படும் மாதொருபாகனாக இறைவனை அடையாளப்படுத்துவதன் மூலம் ஆணும் பெண்ணும் சமமாகக் கலந்த நிலையில் இறைவன் அடையாளப்படுத்தப்பட்டான். சில இறையடியார்கள் தம்மைப் பெண்ணாகவும் இறைவனை ஆணாகவும் உருவகித்துக் காதல் உணர்வுடன் பாடல்களைப் பாடியுள்ளனர். ஆண் ஆன புலவர் தன்னைப் பெண்ணாக உணருவது என்பது ஒருநிலையில் திருநங்கை மனம்தான்.

**ஆண்பெண் அலியெனும் பெற்றியன் காண்க**
**(திருவாசகம், திருஅண்டப்பகுதி, பா.வரி 57)**

**முனிவற நோக்கி நனிவரக் கௌவி**
**ஆண் எனத்தோன்றி அலிஎனப் பெயர்ந்து**
**வான்நுதல் பெண்என ஒளித்தும் சேண்வயின்**
**(திருவாசகம், திருஅண்டப்பகுதி, பா.வரி 133-135 )**

**பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்**
**(திருவெம்பாவை, நூ.பா.18, வரி:5)**

**விண்ணோர் பெருமானே விசிர்த விடையூர்தி**
**பெண்ஆண் அலியாகும் பித்தா பிறைசூடி**
**(தேவாரம்-சம்பந்தர், நூ. பா.18:3)**

**ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன்**
**(நம்மாழ்வார், திருவாய்மொழி, நூ.பா. : 3062)**

இறைவன் எல்லா மனித உயிர்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறவன் எனவும் அவனுடைய பால் தன்மை என எதையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது எனவும் கருதிய சைவசமயக் குரவர்களும், ஆழ்வார்களும் "ஆண்-பெண்-அலி" எனச் சமமாகக் கருதியுள்ளனர். பால் அடிப்படையில் ஆண், பெண் போலவே திருநங்கையும் ஒன்று தான் என்பதைப் பக்தி நெறியில் அடையாளப்படுத்தியது தனித்துவமானது.

தமிழ்ச் சித்த மரபில் முன்னோடியாகக் கருதப்படும் திருமூலர், திருமந்திரத்தில் திருநங்கை பற்றிக் குறிப்பிடுவது ஆய்விற்குரியது. ஆண், பெண், திருநங்கை ஆகிய மூவரின் பிறப்பிற்கான மூல காரணத்தைக் கண்டறிய முயன்றுள்ளார் திருமூலர்.

**குழவியும் ஆணாம் வலத்தது வாகில்**
**குழவியும் பெண்ணாம் இடத்தது வாகில்**
**குழவியும் இரண்டாம் அபானன் எதிர்க்கும்**
**குழவி அலியாகும் கொண்டகால் ஒக்கிலே**
**(திருமந்திரம், பா.எண்: 482)**

ஆணும் பெண்ணும் உடலுறவு கொள்ளும் போது, இருவருடைய மூச்சுக்காற்று வலது பக்க மூக்கு வழியாக வெளிப்பட்டால் ஆண் குழந்தை பிறக்கும்; இடது பக்க மூக்கு வழியாக மூச்சுக்காற்று வெளிப்பட்டால் பெண்குழந்தை பிறக்கும்; காற்று எதிர்ப்பட்டால் குழந்தை அலியாகப் பிறக்கும் என்று கருதுகிறார் திருமூலர்.

**ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகிற் பெண்ணாகும்**
**பூணிரண்டொத்துப் பொருந்தில் அலியாகும்**
***(திருமந்திரம், பா.எண் : 478)***

உடலுறவில் ஆணும் பெண்ணும் ஈடுபட்டிருக்கும் நேரத்தில் ஆண் தன்மை மிகுந்தால் ஆண் குழந்தையும், பெண் தன்மை மிகுந்திருந்தால் பெண் குழந்தையும், ஆண்,பெண் ஆகிய இரு பண்புகளும் சமமாக இருந்தால் அலியாகப் பிறக்கும்.

ஒரு குழந்தை ஆண் அல்லது பெண் அல்லது அலியாகப் பிறப்பதற்கான காரணத்தைக் கண்டறிய முயன்றுள்ளார் திருமூலர். மூச்சுக்காற்று, ஆண் பெண் தன்மைகள் ஆகிய கருத்துகளைப் பயன்படுத்தியுள்ளார். அவருடைய கருத்து எந்த அளவு அறிவியல் பூர்வமானது என்பது ஆய்விற்குரியது. ஆனால் குழந்தை ஆணோ, பெண்ணோ, திருநங்கையோ எதுவாகினும் அது இயற்கையானது என்ற கருத்து இப்பாடல்களில் வெளிப்பட்டுள்ளது.

திருநங்கையை இயல்பாக ஏற்றுக்கொள்ளும் மனநிலை திருமூலருக்கு உள்ளது. மேலும் அவர் இறைவனைப் பற்றிக் குறிக்கையில்,

**காண்கின்ற கண்ணொளி காதல்செய் ஈசனை**
**ஆண்பெண் அலிஉரு வாய்நின்ற ஆதியைப்**
**பூண்படு நாவுடை நெஞ்சம் உணர்ந்திட்டுச்**
**சேண்படு பொய்கைச் செயல் அணையாரே**
***(திருமந்திரம், பா.எண் : 438)***

என்கிறார். காண்கின்ற கண் வழியாகக் கருத்தினுள் கலந்து அருள் புரிகின்ற கடவுளை, ஆணாகவும் பெண்ணாகவும் அலியாகவும் விளங்குகின்ற மூல முதல்வனை எனப் போற்றுகின்ற திருமூலர் ஆண், பெண், அலி ஆகிய மூன்று பாலினரையும் சமமாகப் பாவித்து, இறைவன் மூன்று பால்களிலும் இருக்கிறான் எனக் குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கது. இறைவனை மனித உருவில் அடையாளப்படுத்த முயலும் திருமூலர் ஆண், பெண் ,அலி என மூன்று பால்களிலும் கண்டறிய முயன்றுள்ளார்.

பிற்காலத்திய நீதி நூல்களில் ஒன்றான நீதிநெறி விளக்கம் நூலில் திருநங்கை பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது.

**போக்கறு கல்வி புலமிக்கார் பாலன்றி**
**மீக்கொள் நசையினார் வாய்ச்சேரா - தாக்கணங்கும்**
**ஆணவாம் பெண்மை யுடைத்தெனினும் பெண்ணலம்**
**பேடு கொளப்படுவ தில்.**
***(நீதிநெறி விளக்கம், பா.எண் : 24)***

பிறரைத் தீண்டி வருத்துகின்ற பெண் தெய்வமும் பாலியல் இன்பம் நுகர்வதற்காக ஆண் வடிவம் எடுக்க விரும்புகின்ற அளவு, பெண் எழிலைப் பேடி ஒருத்தி பெற்றிருந்தாலும், பெண்ணினால் கிடைக்கப் பெறும் இன்பம் துய்ப்பதற்கில்லை. கல்வியின் சிறப்பை விளக்க முயலும்போது அழகிய திருநங்கையின் எழிலான பெண் தன்மை சிறப்பற்றது என உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

**கண்ணிற் சொலிச் செவியின் நோக்கும் இறைமாட்சி**
**புண்ணியத் தின்பாலதே ஆயினும் - தண்ணளியால்**
**மன்பதை ஓம்பாதர்க் கென்னாம்? வயப்படைமற்**
**றென்பயக்கும் ஆணல்ல வர்க்கு.**
***(நீதிநெறி விளக்கம், பா.எண் : 27)***

ஆண் அல்லாத பேடிகளுக்கு வெற்றியைத் தரும் வாளினால் என்ன பயன் என்பதன் மூலம் திருநங்கைக்கு வீரமில்லை என்ற கருத்தினை அறியமுடிகிறது.

பிற்கால நீதி நூல்கள் எழுதிய ஔவையார் பாடியுள்ள பாடலொன்றில் திருநங்கை பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது.

**அரியது கேட்கின் வரிவடி வேலோய்**
**அரிது அரிது மானிடர் ஆதல் அரிது**

**மானிடர் ஆயினும் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது.**

இவ்வுலகில் மானிடராய்ப் பிறத்தல் அரிது என்னும் ஔவையார், கூன், குருடு, செவிடு, பேடு இல்லாமல் பிறத்தல் இன்னும் அரிது என்று குறித்துள்ளார். திருநங்கையாகப் பிறத்தல் ஒருவகையில் உடல் ஊனம் என்ற கருத்து இப்பாடலில் தொக்கியுள்ளது. திருநங்கைப் பிறப்பு மானிடப் பிறப்பில் முழுமையானது அல்ல என ஒப்பீட்டளவில் குறிக்கப்பட்டுள்ளது.

சங்ககாலம் தொடங்கி இன்று வரையிலும் ஆண் மேலாதிக்கத் தமிழ்ச் சமூகத்தில் வீரம் பற்றிய புனைவு முன்னிலைப்படுத்தப்படுகிறது. ஆண்Xபெண் என்ற எதிரிணைக்கு முக்கியத்துவம் தரும் நிலையில் திருநங்கை முற்றிலும் புறக்கணிக்கப்படும் சூழல் நிலவுகிறது. இலக்கண நூல்களிலும், நிகண்டுகளிலும் திருநங்கை பற்றிக் குறிப்பிட வேண்டிய கட்டாயம் காரணமாகப் பதிவுகள் உள்ளன. காப்பியங்கள் மூலம் திருநங்கைகள் அரண்மனை வாழ்க்கையுடன் இயைந்து வாழ்ந்த நிலையை அறிய முடிகின்றது. பக்தி இலக்கியப் படைப்புகள் இறைவன் ஆணாய், பெண்ணாய், அலியாய் இருக்கிறான் என்று பால் கடந்த நிலையைக் குறிப்பிட்டுள்ளன. எனினும் பொதுநிலையில் திருநங்கை பற்றிய மதிப்பீடுகள் கீழான நிலையிலேயே இலக்கியப் படைப்புகளில் வெளிப்பட்டுள்ளன. திருநங்கை என்றால் கோழை, வீரமில்லாதவள், வாளேந்திப் போராடத் துணிச்சல் அற்றவள், கூத்தாடுகிறவள் எனத் தமிழிலக்கியப் படைப்புகளில் இழிவான தொனியில் கருத்துகள் பதிவாகியுள்ளன என்பதுதான் உண்மை.

## துணை நூல் பட்டியல்

1. முனிஷ். வெ. 2010. *அரவாணிகளின் பன்முக அடையாளங்கள்.* ஜெயம் பதிப்பகம்: கொல்லவீரம்பட்டி.